மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று முன்னர் பொருத்தப்பட்ட ஒரு குதிரைச் சக்தியுள்ள இயந்திரம் நீர் இறைக்கப் போதுமானதாக இல்லாததால், 5 குதிரை சக்தியுள்ள மின் இயந்திரம் பொருத்தப்பட்டு, தற்போது அந்தக் குடியிருப்புக்குக் குழாய் மூலமாக நீர் அளிக்கப் படுகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முட்டைவாக்கம் காலனியில் இன்னும் பாதி கிராமத்திற்குக் குடிநீர் வழங்க வேண்டியிருப்பதால், அப்பகுதிக்கும் குடிநீர் வசதியளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-20]

2. தகவல் கோரல்.

(அ) திரு. பூபேஷ்குப்தா மறைவு குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 21-ஆம் தேதி நடந்த சபை நடவடிக்கைகளில் மாண்புமிகு ஆதித்தனார் அவர்களுக்கு அஞ்சலி தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதேபோல இராஜ்யசபாவில் உறுப்பினராக இருந்து மறைந்த தோழர் பூபேஷ் குப்தா அவர்களுக்கு.......(குறுக்கீடு) சஞ்சய் காந்திக்கு இங்கே இரங்கல் தீர்மானம் வந்திருக்கிறது...................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவது என்பது வேறு, கட்சி வேறுபாடுகள் குறித்து விவாதம் செய்வது என்பது வேறு. அதற்கு இந்த அவையைப் பயன்படுத்த வேண்டாம்.